# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.245/2022 P.W.7

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சேது | த-பெ | சிதம்பரம் |
| ஊர்: | : | இலுப்பக்குடி | சமயம்: | |
| வயது: | : | 63/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கடை வியாபாரம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2025

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்படவில்லை.**

-----------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் இலுப்பக்குடியில் வசித்து கடை வியாபாரம் செய்து வருகிறேன். 2013 ம் வருடம் நான் இலுப்பக்குடியில் மாத்தூரில் கபடி மேட்ச் நடைபெற்றது. நான் பிரபு ஆகிய இருவரும் பேசிக்கொண்டிருந்தோம். இரவு 9.30 மணியளவில் எனக்கு போன் ஒன்று வந்தது. அதில் பேசிய மணிமேகலை என்ற பெண்மணி சுடுகாடு பக்கம் இருசக்கர வாகனத்தில் வந்த போது கழுத்தில் அணிந்திருந்த ஒன்றரை பவுன் தங்கசெயினை நபர் ஒருவர் பறித்து சென்றதாக என்னிடம் சொன்னார். நானும் எனது நண்பர்களுடன் சம்பவ இடத்திற்கு சென்று அவரை பார்த்தபோது கடையை சாத்திவிட்டு வைகைநகர் தாண்டி சென்று கொண்டிருந்தபோது வழிமறித்து தன்னுடைய நகையை நபர் ஒருவர் பறித்ததாகவும் நான் திருடன் திருடன் என்று சத்தம் போட்டதாகவும் சத்தம் போட்டால் கொன்று விடுவேன் என்று மிரட்டியதாகவும் அந்த நபரை பார்த்தீர்களா என்று கேட்டதற்கு நான் பார்த்ததாக எங்களிடம் அவர் சொன்னார். சம்பவ சமயத்தில் போலீசார் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவத்தை குறித்து நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். புகார்தாரர் என்னுடைய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.10.15 14:57:13 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி.